**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2017**

**வழக்கு சாட்சி: PW.9**

**தேதி: 07.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **சுந்தரகோபாலன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **முத்து** | **தொழில்:** | **ஊராட்சி மன்ற தலைவர்** |
| **கிராமம்:** | **இலங்குடிபட்டி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **திருமயம்** | **வயது:** | **56** |

**முதல் விசாரணை:**

நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் தேக்காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவராக பணிபுரிந்து உள்ளேன். 23.05.2015ந் தேதி காலை 10.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருக்கும்போது எதிரி வசந்தி எனது வீட்டிற்கு வந்தார். தனது வீட்டிற்கு சிலிண்டர் போட வருபவருக்கும் தனக்கும் தொடர்பு இருந்ததாகவும் அதனால் தனக்கும் கணவருக்கும் பிரச்சினைகள் ஏற்பட்டு வந்ததாகவும் வசந்தி கூறினார். சிலிண்டர் போட வருபவர் தனக்கு போன் செய்தால் எனது கணவரை கொலை செய்துவிடலாம் என கூறியதாக வசந்தி கூறினார். அவரையும் ராஜா என்பவரையும் தான் வீட்டிற்குள் விட்டதாகவும், அவர்கள் தனது கணவரை கொல்ல முயற்சித்ததாகவும், பிறகு கம்பியால் அடித்து தனது கணவரை கொலை செய்ததாகவும், வெளியே வந்து கணவரை கொலை செய்து விட்டதாகவும், தூக்கிக் கொண்டுபோய் ரயில்வே தண்டவாளத்தில் போட்டு விட்டு வந்ததாகவும் வசந்தி சொன்னார். பின்னீடு காவல் துறையினர் விசாரித்தார்கள். நானும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றேன். சம்பவ இடமான ரயில்வே தண்டவாளத்திலிருந்து 100மீ துாரத்திலிருந்து அதிமுக கட்சி வேஷ்டி ஒன்றும்

மற்றவைகள் ஞாபகம் இல்லை. காவல் துறையினர் விசாரித்தார்கள். என்னுடன் நடராஜன் என்வரும், சுப்பையா என்பவரும் இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அ.த.சா.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 2வது எதிரி வசந்தியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட **அ.த.சா.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரம் கூறினேன்.

**3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3வது எதிரி வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 1 பர்லாங் தொலைவு இருக்கும். 3வது எதிரி வசந்தியின் வீடு நமனசமுத்திரம் காவல் நிலையத்திற்கு எதிரே உள்ளது என்றால் சரிதான். 26.02.2015 அன்று நான் பஞ்சாயத்து தலைவராக இருந்தேன். 26.02.2015 அன்று 3வது எதிரியின் கணவர் ரயில் விபத்தில் அடிபட்டு இறந்து கிடந்ததாக கேள்விப்பட்டேன். 3வது எதிரி சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து எனது வீட்டிற்கு வந்தார் என்றால் எத்தனை நாட்கள் என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.2,3 உள்ள கையொப்பங்கள் நமனசமுத்திரம் காவல் நிலையத்தில் வைத்து வாங்கப்பட்டதா என்றால் தெரியாது. நான் மட்டும்தான் கையொப்பம் செய்தேன். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எழுதிய பேப்பரில் கையொப்பம் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. நான் பேனாவில் எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் செய்தேன். எத்தனை பக்கங்கள் எழுதியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதிமுக வேஷ்டியை ரயில்வே தண்டவாளம் அருகே 100மீ தொலைவில் காவல் துறையினர் கைப்பற்றி எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலம் காவல்

துறையினரால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் என்னால் எந்த கையொப்பமும் இடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. (3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1,2 எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது).

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2017**

**வழக்கு சாட்சி: PW.10**

**தேதி: 07.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **ஆறுமுகம்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **மாயாண்டி** | **தொழில்:** | **கிராம நிர்வாக அலுவலர்** |
| **கிராமம்:** | **புதுக்கோட்டை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **புதுக்கோட்டை** | **வயது:** | **63** |

முதல் விசாரணை:

நான் தற்சமயம் புதுக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் தேக்காட்டூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது வீட்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 23.05.2015ம் தேதி காலை 7.00 மணியளவில் நான் வீட்டிலிருக்கும் போது தேக்காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த சுந்தரகோபாலன் என்பவர் என்னை அவர் வீட்டிற்கு வரும்படி அலைபேசி மூலம் அழைத்தார். நான் அவர் வீட்டிற்கு 7.30 மணியளவில் சென்றேன். அங்கு 3வது எதிரி வசந்தி, சுப்பையா, நடராஜன் ஆகியோர் இருந்தனர். எதற்காக என்னை அழைத்தீர்கள் என சுந்தரகோபாலனிடம் கேட்டேன். 3வது எதிரி வசந்தியின் கணவர் கிருஷ்ண மூர்த்தி தற்கொலை செய்துகொள்ளவில்லை என்றும், 3வது எதிரி 1,2 எதிரிகளுடன் சேர்ந்து அவரை கொலை செய்துவிட்டதாக வாக்குமூலம் தர வசந்தி வந்துள்ளதாக சொன்னார். நானும் வசந்தியை விசாரித்தேன். வசந்தி சுந்தரகோபாலனிடம் கொடுத்த வாக்குமூலத்தையும் படித்துப் பார்த்து நானும் அதில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.3ல் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். சுந்தரகோபாலனும் அதில் கையெழுத்துச் செய்தார். அதன்பிறகு வசந்தியை காரைக்குடியில் உள்ள ரயில்வே காவல் நிலையத்தில் ஆஜர் செய்தோம். அங்கே ஆய்வாளர் எங்கள் முன்பாக வசந்தியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், தலைவர் சுந்தரகோபாலனும் கையெழுத்து செய்தோம். ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்க்க சென்றார். அவருடன் நானும், தலைவர் சுந்தரகோபாலனும் சென்றோம். சம்பவ இடத்தை பார்வையிட்ட பின்னீடு

பொருட்களை கைப்பற்றினார்கள். கைப்பற்ற பொருட்களுக்கு அத்தாட்சி தயார் செய்தார்கள். அந்த அத்தாட்சி அ.த.சா.2ல் நானும் கையெழுத்து செய்துள்ளேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விவரங்களை கூறினேன்.

**3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் கையொப்பம் செய்துள்ள கையொப்பத்தில் எனது அலுவலக முத்திரை இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த கையொப்பத்தை (அ.த.சா.ஆ.2 மற்றும் 3) காவல் நிலையத்தில் வைத்துதான் போட்டேன் என்று சொன்னால் சரிதான். நானும், தலைவர் சுந்தரகோபாலனும் கையொப்பம் செய்தோம். நானும், தலைவர் சுந்தரகோபாலனும் காவல் நிலையத்திற்கு காலை 9.00 மணியளவில் சென்றோம். நானும், சாட்சி சுந்தரகோபாலனும் எதிரி வசந்தியிடம் பெற்ற வாக்குமூலத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். வசந்தி, சுந்தரகோபாலனிடம் கொடுத்த வாக்கு மூலத்தை, காவல்நிலையத்தில் ஒப்படைத்த பேப்பர் யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. நான் பணிபுரிந்த கிராம நிர்வாக அலுவலகத்திற்கும், காவல் நிலையத்திற்கும் எவ்வளவு துாரம் என்று கேட்டால் எனக்கு தெரியாது. நான் கிராம நிர்வாக அலுவலராக 33 வருடங்கள் பணிபுரிந்துள்ளேன். காரைக்குடி காவல் நிலையத்திற்கும், என்னுடைய கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் சுமார் 25 கி.மீ துாரம் இருக்கும். நான் காவல் நிலையத்திற்கு பேருந்தில் தான் சென்றேன். அரைக்கை சட்டை ஒன்று, அதிமுக கரை போட்ட நாலு முழ வேஷ்டி ஒன்று, வெள்ளை நிற தலையணை உறை ஒன்று, கருப்புநிற துப்பட்டா ஒன்று ஆகியவைகள் கைப்பற்றப்பட்டது. முட்புதருக்குள் இருந்து மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டது. எதிரி வசந்தி எடுத்துக் கொடுக்க காவலர்கள் கைப்பற்றினார்கள். காவலர்கள் காவல்துறை வாகனத்தில் வந்தார்கள். எத்தனை காவலர்கள் வந்தார்கள் என்று தற்சமயம் ஞாபகமில்லை. நான் கையொப்பம் செய்த அனைத்து பேப்பர்களும் பேனாவால் கையால் எழுதப்பட்டது என்றால் சரிதான். ( அ.த.சா.ஆ.2, 3) அந்த பேப்பர்களில் அடித்தல், திருத்தல் எதுவும் இல்லை. அந்த பேப்பர்களில் நானும், சுந்தரகோபாலனும் கையொப்பம் செய்துள்ளோம். நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எதிலும் கையெழுத்து செய்யவில்லை என்றும், நான் அரசு ஊழியராக இருந்ததால் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொன்னது போல் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

சுந்தரகோபாலன் என்னை அலைபேசி மூலம் அழைத்ததை அந்த எண் குறித்து காவல் துறை விசாரணையில் நான் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எனக்கு உடனடி மேலதிகாரி வருவாய் ஆய்வாளர் ஆவார். வருவாய் ஆய்வாளர் மூலமாக வட்டாச்சியரிடம் எழுத்து மூலமாக சமர்ப்பித்துள்ளேன். போலீஸார் அது குறித்து கேட்காததால் அந்த ஆவணத்தை நான் கொடுக்கவில்லை. மகஜர், ஒப்புதல் வாக்கு மூலம் ஆகியவைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், காவல் நிலையத்தில் வைத்து அவைகளில் கையெழுத்து மட்டும் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. (1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2வது எதிரி தரப்பு ஏற்றுக்கொள்கிறார்கள்.)